பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

03 11 2024 7 15
ஞாயிற்றுக்க்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. சுயசார்பு இந்தியா திட்டத்தின் மூலம் வரும் 2030ஆம் ஆண்டுக்குள் பாதுகாப்புத் துறையின் ஏற்றுமதி 50 ஆயிரம் கோடி ரூபாயை எட்டும் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

2. ஜார்கண்ட் மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிஜேபியின் தேர்தல் அறிக்கையை அக்கட்சியின் மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா இன்று வெளியிடுகிறார்.

3. வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு குறித்து பேச்சு நடத்துவதற்காக ஆஸ்திரேலியாவுக்கு இன்று புறப்பட்டுச் செல்கிறார்.

4. கஷ்மீரில் பாதுகாப்புப் படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் 3 தீவிவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

5. ஸ்விட்சர்லாந்தில் நடைபெற்ற சுவிஸ் ஓபன் வில்வித்தைப் போட்டியில் இந்தியாவின் **Atanu Das** வெண்கலப் பதக்கம் வென்றார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

சுயசார்பு இந்தியா திட்டத்தின் மூலம் வரும் 2030ஆம் ஆண்டுக்குள் பாதுகாப்புத் துறையின் ஏற்றுமதி 50 ஆயிரம் கோடி ரூபாயை எட்டும் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கான்பூரில் உள்ள இந்திய தொழில்நுட்ப கழகத்தின் 65வது நிறுவன தினத்தில் உரையாற்றிய அவர், பத்து ஆண்டுகளுக்கு முன்பு வெறும் 600 கோடியாக இருந்த பாதுகாப்பு தளவாட ஏற்றுமதி இன்று 21 ஆயிரம் கோடியைத் தாண்டி சாதனை படைத்துள்ளதாக கூறினார்.

தற்போதை புவிசார் அரசியல் சூழ்நிலையில் தொழில்நுட்பம் மிகப்பெரிய முக்கியத்துவம் பெற்றுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

வளர்ச்சியடைந்த பாரதம் என்ற தொலைநோக்கு பார்வையை நனவாக்க உயர்தர தொழில்நுட்பங்களை உள்நாட்டிலேயே உருவாக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இளைஞர்கள் தங்கள் திறனை உணர்ந்து நாட்டின் முன்னேற்றத்திற்கு பங்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

பாதுகாப்புத் துறையில் இந்தியாவை தற்சார்பு உடையதாக மாற்றுவதற்கு தனியார் துறையினர், கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று கூறினார்.

<<<<>>>>

ஜார்கண்ட் மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிஜேபியின் தேர்தல் அறிக்கையை அக்கட்சியின் மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா இன்று வெளியிடுகிறார்.

இரண்டு நாள் பணமாக நேற்றிரவு ராஞ்சி சென்ற அவர், மாநில பிஜேபி தலைவர்களுடன் தேர்தல் ஆயத்தப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்கிறார்.

**Dhalbhumgarh, Barkata, Simaria** ஆகிய இடங்களில் திரு. அமித் ஷா இன்று பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

<<<<>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், சிங்கப்பூர் மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு இன்று ஆறு நாள் பயணம் மேற்கொள்கிறார்.

முதலில் ஆஸ்திரேலியா செல்லும் திரு ஜெய்சங்கர், பிரிஸ்பெயின் நகரில் அமைக்கப்பட்டுள்ள நான்காவது இந்திய தூதரகத்தை அவர் திறந்து வைக்கிறார்.

அந்நாட்டின் தலைநகர் கான்பராவில் நடைபெறவுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர்கள் சந்திப்பில் ஆஸ்திரேலிய அமைச்சர் பென்னி வாங்குடன், இருதரப்பு ஒத்துழைப்பு, வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு குறித்து பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் உரையாற்றவுள்ளார்.

அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்திய வம்சாவளியினர் மற்றும் தொழில் அதிபர்களை தனித்தனியாக சந்தித்து அவர் பேச்சு நடத்துகிறார்.

ஆஸ்திரேலிய பயணத்தை முடித்துக்கொண்டு வரும் 8-ஆம் தேதி சிங்கப்பூர் புறப்படும் திரு ஜெய்சங்கர், ஆசியான் வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்கிறார்.

சிங்கப்பூர் தலைவர்களை சந்தித்து இருநாட்டுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்தும் அவர் பேச்சு நடத்தவுள்ளார்.

<<<<>>>>

தேர்தல் வாக்குறுதிகளை மத்தியில் ஆளும் பிஜேபி அரசு நிறைவேற்றி வருவதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் பூரி தெரிவித்துள்ளார்.

தில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் பொய்யான வாக்குறுதிகளை அளித்து மக்களை ஏமாற்றி வருவதாக அவர் குற்றம் சாட்டினார்.

வயநாடு மக்களவைத் தேர்தலில் திருமதி பிரியங்கா காந்தி வேட்புமனு தாக்கல் செய்தபோது கட்சியின் தலைவர் திரு. மல்லிகார்ஜுன் கார்கே தடுத்து நிறுத்தப்பட்டு அவரது கட்சியினராலேயே அவர் புறக்கணிக்கப்பட்டுள்ளார் என்று கூறினார்.

மேலும் கர்நாடக மாநில முதலமைச்சரும், துணை முதலமைச்சரும் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் செயல்படுவது, காங்கிரஸ் கட்சி மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை சீர்குலைக்கும் என்று திரு. கார்கே குறிப்பிட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

2014ஆம் ஆண்டு தேர்தலில் அளித்த வாக்குறுதிகளை பிஜேபி அரசு செயல்படுத்தி வருவதாகவும், பொருளாதாரம், தேசிய பாதுகாப்பு, சமூக நலன் ஆகியவற்றில் பல திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளதாகவும் திரு. ஹர்தீப்சிங் பூரி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

கஷ்மீரில் பாதுகாப்புப் படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் 3 தீவிவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

தீவிரவாதிகளின் நடமாட்டம் இருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் பாதுகாப்பு படையினர் இருவேறு இடங்களில் சோதனை மேற்கொண்டனர்.

அப்போது ஏற்பட்ட மோதலில் இருதரப்பினரும் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய கஷ்மீர் காவல்துறை தலைவர் திரு. வி.கே. **Birdi,** லஷ்கர் தீவிரவாத அமைப்பில் கமாண்டராக செயல்பட்ட பாகிஸ்தானை சேர்ந்த உஸ்மான் என்றழைக்கப்படும் சோட்டா வலீத் கொல்லப்பட்டதாக அவர் கூறினார்.

சுட்டுக்கொல்லப்பட்ட இந்த தீவிரவாதி கஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதியில் பல்வேறு தீவிரவாத செயல்களில் ஈடுபட்டு வந்ததாக அவர் குறிப்பிட்டார்.

இந்த துப்பாக்கி சண்டையின்போது இரண்டு ஜம்மு-கஷ்மீர் காவல்துறையினரும், 4 பாதுகாப்புப் படையினரும் காயமடைந்ததாகவும், பின்னர் அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே பனார் மற்றும் பந்திப்போரா பகுதியில்தீவிரவாதிகளின் நடமாட்டம் இருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் பாதுகாப்பு படையினர் அங்கும் தற்போது தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தீபாவளி பண்டிகை முடிந்து ஊர்திரும்பும் பயணிகளின் வசதிக்காகவும், கூட்ட நெரிசலைக் குறைகும் வகையிலும் இந்திய ரயில்வே பல சிறப்பு ரயில்களை இயக்குகிறது.

தில்லியில் இருந்து நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு 20 சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தர்பங்கா, ராஞ்சி, பட்னா, சுத்ரா, முஸாஃபர்பூர், பல்லியா, கமக்யா, ஆஸம்கர் ஆகிய பகுதிகளுக்கு இந்த சேவை வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே தெற்கு ரயில்வேயும் இன்று சிறப்பு ரயில்களை இயக்குகிறது.

தாம்பரம் – திருச்சி இடையே இன்று காலை 8.30 மணிக்கு சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.

இது பிற்பகல் மணி 1.40க்கு திருச்சி சென்றடைகிறது. மறுமார்கத்தில் இன்றிரவு மணி 10.50க்கு புறப்படும் ரயில் நாளை காலை மணி 6.10க்கு சென்னை வந்தடைகிறது.

சென்னை எழும்பூரில் – மதுரை விரைவு ரயில் இன்று காலை மணி 10.15க்கு புறப்படுகிறது. இந்த ரயில் மாலை மணி 6.30க்கு மதுரை சென்றடைகிறது.

மறுமார்கத்தில் மதுரையில் இருந்து இன்று மாலை 7.15க்கு இயக்கப்படும் ரயில் நாளை காலை மணி 3.20க்கு தாம்பரம் வந்தடையும் என்று தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

விண்வெளியின் மனிதர்கள் வாழ்வதற்கான சூழலை உருவாக்கி ஆய்வுகளை மேற்கொள்ளும் நடவடிக்கையை இஸ்ரோ தொடங்கியுள்ளது.

லடாக்கில் தலைநகர் லே-யில் இதற்கான ஆய்வகம் ஏற்படுத்தப்படட்டுள்ளது.

எதிர்காலத்தில் நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்தினை இந்தியா செயல்படுத்த உள்ளது.

அதற்கு முன்னோடியாக நிலவு மற்றும் விண்வெளியின் சூழலை செயற்கையாக உருவாக்கி ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது.

லடாக்கில் நிலவும் வறட்சி மற்றும் கடுமையான குளிர், கடல் மட்டத்தில் இருந்து மிக உயரமான இடத்தின் சூழல் ஆகியவை செவ்வாய் மற்றும் நிலவின் சூழல்களை ஒத்திருப்பதால் இந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இந்த ஆய்வுகளின் மூலம் கிடைக்கும் தரவுகள் விண்வெளிப் பயணங்களில் மனிதர்களை ஈடுபடுத்துவதற்கு உதவும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தமிழகத்தின் பல்வேறு இடங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் பெய்துவரும் கனமழையால் நேற்று அரசு மருத்துவமனை வளாகத்திற்குள் தண்ணீர் புகுந்தது.

கோணேரிப்பட்டி பகுதியில் உள்ள வீடுகளிலும் தண்ணீர் புகுந்ததால் மக்கள் பாதிக்கப்பட்டனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்துவரும் கனமழை காரணமாக நாகர்கோவிலை அடுத்த புதுகிராமம் பகுதியில் வீடுகளுக்குள் வெள்ளம் சூழ்ந்தது.

இதனால் அப்பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களை அம்மாவட்ட ஆட்சியர் திருமதி அழகு மீனா நேரில் சந்தித்து அவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்யுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

<<<<>>>>

ஸ்விட்சர்லாந்தில் நடைபெற்ற சுவிஸ் ஓபன் வில்வித்தைப் போட்டியில் இந்தியாவின் **Atanu Das** வெண்கலப் பதக்கம் வென்றார்.

சுவிட்சர்லாந்தின் தாமஸ் ரூஃபரை 6-4 என்ற புள்ளிக் கணக்கில் அவர் தோற்கடித்தார்.

-------------

டென்மார்க்கில் நடைபெற்று வரும் ஹைலோ ஓபன் பேட்மிட்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டிக்கு இந்தியாவின் மாளவிகா பன்சோட் முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற அரை இறுதி ஆட்டத்தில் அவர், டென்மார்க்கின் **Julie Davall**-ஐ 23-21, 21-18 என்ற செட் கணக்கில் அவர் வீழ்த்தினார்.

இன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் மாளவிகா, மற்றொரு வீராங்கனை **Miablichfeldt**-ஐ எதிர்கொள்கிறார்.

----------------

மும்பையில் நடைபெற்றுவரும் இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று ஆட்டநேர இறுதியில் நியூசிலாந்து தனது இரண்டாவது இன்னிங்சில் 9 விக்கெட் இழப்பிற்கு 171 ரன் எடுத்தது.

நியூசிலாந்து 143 ரன் முன்னிலை பெற்றுள்ளது.

இந்தியாவின் ரவீந்திர ஜடேஜா 4 விக்கெட்டுகளையும், அஸ்வின் மூன்று விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

வாஷிங்டன் சுந்தரும், ஆகாஷ்தீப்-மும் தலா ஒரு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

முன்னதாக, இந்தியா தனது முதல் இன்னிங்சில் 263 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

**<<<<The End>>>>**